# கணக்காய்வு சேவை ஆணைக்குழு

# செயலாற்றுகை அறிக்கை

# 2018.10.01-2018.12.31


*கணக்காய்வு சேவை ஆணைக்குழு*

*இல .35/ஏ*

*கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை*

*கொழும்பு 08.*

## தூர நோக்கு

பொது மக்களுக்கான கட்டுப்பாட்டுக்கும், பொறுப்புக்கூறலுக்குமான அற்பணித்த உயர்தரமான கனக்காய்வுச் சேவை.

## செயற் பணி

தொழில் சார் நிபுணத்துவம்,தேர்ச்சி மற்றும் புத்தாக்கத்துடன் கூடிய நல்லாட்சியை அடிப்படையாகக் கொண்ட அரச கணக்காய்வுச் சேவையை நிறுவுவதன் மூலம் அரச உடமைகளுக்கு பொறுப்புக்கூறல்.

## எமது மதிப்பீடுகள்

- சுயாதீனத் தன்மை
- நடு நிலைமை
- நேர்மை
- புத்தாக்கம்
- வெளிப்படைத் தன்மை
- பொறுப்புக் கூறல்
- தொழிற் திறன்

## உள்ளடக்கம்


| தொடர் எண் | விடயம் | பக்கம் |
|---|---|---|
| **1.** | அறிமுகம் | 1 |
| **2.** | கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் கடமைகளும் பொறுப்புகளும். | 1-2 |
| 2.1 | அரசியலமைப்பின் 153 ( இ ) உறுப்புரையின் கீழ் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்காக தரப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புக்களினதும் அடைவுகள் | 1 |
| 2.2 | 2018.08.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறையிலுள்ள 2018.19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மூலம் உரித்தளிக்கப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புக்கள். | 1-2 |
| **3.** | கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் 2018.10.01 ஆம் திகதி முதல் 2018.12.31 ஆம் திகதி வரையிலான செயலாற்றுகை அறிக்கை | 2-4 |
| 3.1 | அரசியலமைப்பின் 153 ( இ )பிரகாரம் தரப்பட்டுள்ள 2018 /19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மூலம் உரித்தளிக்கப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புக்களினதும் அடைவுகள். | 2 -3 |
| 3.2 | நிருவாக மற்றும் நிதி அடைவுகள் | 3-5 |
| 3.3 | ஆணைக்குழுவின் அமர்வுகள் | 5 |
| **4.** | பணியாளர் குழாம் | **6** |
| 4.1 | பணியாளர்களின் பயிற்சி | 7 |
| **5.** | இணைப்புகள் | 8-9 |
| | 1. 2018.01.01ஆம் திகதி முதல் 2018.12.31திகதி வரையிலான நிதிஅறிக்கை | 8 |
| | 2. கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் தாபன நிரல் படம் | 9 |

# கணக்காய்வு சேவை ஆணைக்குழு

## 1. அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ***XVII***ஆம் பிரிவின் ***153*** அ*(1)*இன் பிரகாரம் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளது.

## 2. ஆணைக்குழுவின் கடமைகளும் பொறுப்புக்களும்.

**2.1** அரசியலமைப்பின் 153 (இ) பிரிவின் படி உரித்தளிக்கப்பட்டுள்ள கடமைகளும் பொறுப்புக்களும்.

*I.* இலங்கை அரச கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அங்கத்தினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும்பதவி நீக்கும் அதிகாரம்.

*II.* இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சேர்ந்த உறுப்பினர்களை நியமித்தல், பதவியுயர்த்துதல், இடமாற்றுதல், அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் அவர்களைப் பதவி நீக்குதல் சம்பந்தமான சட்ட திட்டங்களை உருவாக்குதல்.

*III.* சட்டத்தினால் உருவாக்கப்பட்ட கணக்காய்வு சேவையின் வருடாந்த மதிப்பீட்டை தயார் செய்தல்.

*IV.* மேலும் சட்டத்தினால் உருவாக்கப்பட்டு ஒப்படைக்கப்படும் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கும் நடைமுறைப் படுத்துவதற்குமான அதிகாரம்.

### 2.2 2018.08.01ஆம் திகத்யிளிருந்து நடைமுறையில் உள்ள 2018 / 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் உரித்தளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகள்.

***I.*** இலங்கை கணக்காய்வு நியமங்களில் நிறைவேற்றுகைக் கணக்காய்வுகள், சூழல் கணக்காய்வுகள்,தொழில் நுட்பக்கணக்காய்வுகள் மற்றும் வேறு விசேட கணக்காய்வுகளுக்காகக் கணக்காய்வு நியமங்கள் குறித்துரைக்கப்படாதுவிடத்து கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவானது அத்தகைய கணக்காய்வுகளுக்கு ஏற்புடையனவாக வேண்டிய உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச ஒழுங்கமைப்பினால் தீர்மானிக்கப்பட்ட உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களின் ஏற்பாடுகளை,உள்ளூர் தேவைப்பாடுகளுக்கு ஏற்றால்போல அவசியமான திருத்தங்களுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் குறித்துரைத்தல்.

II. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் வேறுவகையாகக் குறிப்பாக குறிப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய,கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவானது கணக்காய்வுக்குட்படு உருவகமொன்றின் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களினதும் குறைபாட்டின் அல்லது இழப்பின் பெறுமதி மீது மிகைக் கட்டணமொன்றை விதிப்பதற்காக அத்தகைய கொடுக்கல் வாங்கல் ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு முரணாக செய்யப்பட்டுள்ளதென்றும் அக்கொடுக்கள் வாங்கலில் சம்பந்தப்பட்டோரின் மோசடி ,அசட்டை,கையாடல் அல்லது ஊழல் காரணமாக ஏதேனும் குறைபாடு அல்லது இழப்பு விளைந்துள்ளதென்றும் நம்புவதற்கு கணக்காய்வு சேவை ஆணைக்குழு நியாயமான ஏத்துக்களைக் கொண்டிருக்குமிடத்து அக்கணக்காய்வுக்குட்படு உருவாக்கத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு அறிக்கையிடுதல்.

III. ஆணைக்குழுவின் அலுவல்களில் உதவுவதற்கு குழுக்களை நியமித்தல்.

IV. தேசிய கணக்காய்வு அலுவலகப் பணியாட் தொகுதியினரின் நிறைவேற்றுகைத் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களை அமுல் படுத்துதல்.

V. கணக்காய்வு சட்டத்தில் கூறப்பட்டுள்ள சட்ட விதிகளை உருவாக்குதல்.

VI. அரச கணக்காய்வு பயிற்சி நிலையத்தின் முகாமைக்குத் தேவையான சட்ட திட்டங்களை உருவாக்குதல்.

## *3.* **கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின்** *2018.10.01* **ஆம் திகதி தொடக்கம்** *2018.12.31* **ஆம் திகதி வரையிலான செயலாற்றுகை அறிக்கை**.

**3.1** அரசியலமைப்பின் 153 (இ) மற்றும் 2018 / 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளும், பொறுப்புக்களும்.

| தொடர் இல. | அதிகாரம் | அடைவுகள் |
|---|---|---|
| 1 | இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சேர்ந்த உறுப்பினர்களை நியமித்தல்,பதவியுயர்த்துதல்,இடமாற்று தல்,அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் அவர்களைப் பதவி நீக்குதல். | 1.ஆட்சேர்ப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள்<br>➢ பதவி நிரந்தரப்படுத்தல் - 05<br>➢ பதவியிலிருந்து ஓய்வு வழங்குதல் -06<br>➢ கேட்டு விளகிக்கொள்ளல் - 01<br>**II.** பதவியுவர்வு<br>➢ உதவி கணக்காயிவாளர் பதவிக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டமை. - 11 |


| | | |
|---|---|---|
| 2 | இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சேர்ந்த உறுப்பினர்களை நியமித்தல், பதவியுயர்த்துதல், இடமாற்றுதல், அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் அவர்களைப் பதவி நீக்குதல் சம்பந்தமான சட்ட திட்டங்களை உருவாக்குதல். | கணக்காய்வு சேவை ஆணைக்குழு - நடைமுறை விதிமுறைக்கான மதிப்பாய்வுகளையும் அவதானங்களையும் பெறுதல். |
| 3 | இலங்கை கணக்காய்வு நியமங்களில் நிறைவேற்றுகைக் கணக்காய்வுகள், சூழல் கணக்காய்வுகள், தொழில் நுட்பக்கணக்காய்வுகள் மற்றும் வேறு விசேட கணக்காய்வுகளுக்காகக் கணக்காய்வு நியமங்கள் குறித்துரைக்கப்படாதுவிடத்து அதற்குதேவையான தர நிலைகளை உருவாக்குதல். | இலங்கை அரச துறையின் கணக்காய்வு தரநிலை தொடர்பாக தலைவரினால் சமர்ப்பித்த வரைபில் உள்ளடங்கிய விடயங்களை ஆய்வு செய்ய குழு ஒன்றினை நியமித்து அதன் பரிந்துரைகளை ஆணைக்குழுவிற்கு முன் வைப்பதற்காக கணக்காய்வு தலைமை அதிபதிக்கு அறிவித்தல். |
| 4 | ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு உதவியாக குழு நியமித்தல். | இலங்கை அரச கணக்காய்வு சேவையை நிறுவுவதற்குத் தேவையான சேவை பிரமாணக் குறிப்பை வரைவதற்காக ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய குழுவை நியமனம் செய்தமை. |


### 3.2 நிருவாக மற்றும் நிதி அடைவுகள்


*2018 ஆம் ஆண்டின் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினது மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகளில் 2018.10.01 தொடக்கம் 2018.12.31வரையிலான நிதியாண்டினுள் மீண்டெழும் செலவுக்காக 9,457,906.89 ரூபாவும் மூலதன செலவுக்காக 1,979,846.81ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.*

***நிதி அடைவுகளின் சாராம்சம் - 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரை***

| | ஒதுக்கம் ரூபா. *(2018 ஆம் வருட மதிப்பீட்டின் பிரகாரம்)* | மேலதிக ஒதுக்கீடு ஒதுக்கம் *2018* ரூபா. | *நி.க 66* மாற்றுதல் -2018 ரூபா. | ஒப்புதல் மொத்த ஒதுக்கீடு ஒதுக்கம் 2018 ரூபா. | மொத்தச் செலவு (2018.01.01-2018.12.31) ரூபா. | மீதி *2018.12.31* திகதியன்று ரூபா. |
|---|---|---|---|---|---|---|
| மீண்டெழும் | 44,322,000.00 | 1,000,000.00 | (925,000.00) | 44,397,000.00 | 37,432,201.85 | 6,964,798.15 |
| மூலதன | 1,885,000.00 | - | 925,000.00 | 2,810,000.00 | 2,507,372.31 | 302,627.69 |
| மொத்தம் | **46,207,000.00** | **1,000,000.00** | **-** | **47,207,000.00** | **39,939,574.16** | **7,267,425.84** |






2018.01.01தொடக்கம் 2018.12.31ஆம் திகதி வரையிலான நிதி அறிக்கை இணைப்பு 01இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3.2 ஆணைக்குழுவின் அமர்வுகள்

*2018.10.01 ஆம்திகதி தொடக்கம் 2018.12.31 திகதி வரையிலான காலப்பகுதியினுள் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் மொத்தமாக (06) அமர்வுகள் இடம் பெற்றிருக்கிறது.*

*இதற்கு மேலதிகமாக இலங்கை அரச கணக்காய்வு சேவையை உருவாக்குவதற்காக யாப்பொன்றை வரைவதற்குத் தேவையான குழு ஒன்றினை அமைப்பதற்காக விசேட ஆணைக்குழு அமர்வொன்று நடாத்தப்பட்டுள்ளது .*

## 1. பணியாளர் குழாம்

கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 43 ஆகும்.

| கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதிக்கப்பட்ட, தற்போது உள்ள மற்றும் வெற்றிடம் சம்பந்தமான விபரம் 2018.12.31ஆம் திகதியன்று | | | | |
|---|---|---|---|---|
| **பதவி மட்டம்** | **பதவி** | **அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை** | **சேவையில் உள்ள எண்ணிக்கை** | **வெற்றிடம்** |
| **சிரேஷ்ட மட்டம்** | செயலாளர்<br>மேலதிகச் செயலாளர்<br>சிரேஷ்ட உதவிச் செயலாளர்<br>பணிப்பாளர்<br>உதவிச் செயலாளர்<br>உதவிப் பணிப்பாளர்<br>கணக்காய்வு அத்தியட்சகர்<br>கணக்காளர்<br>சட்ட அலுவலர் | 10 | 03 | 07 |
| மூன்றாம் நிலை மட்டம் | நிருவாக உத்தியோகத்தர்<br>மொழி பெயர்ப்பாளர்<br>தகவல் தொழில் நுட்ப அலுவலர். | 05 | 02 | 03 |
| இரண்டாம் நிலை மட்டம் | தகவல் தொழில் நுட்ப உதவியாளர்<br>அரச முகாமைத்துவப் பணிப்பாளர் | 16 | 11 | 05 |
| ஆரம்ப மட்டம் | சாரதி<br>காரியாலய உதவியாளர் | 12 | 9 | 03 |
| **மொத்தம்** | | **43** | **25** | **18** |

*கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அமைப்பு அட்டவணை இணைப்பு 02 இல் காட்டப்பட்டுள்ளது.*

### 1.1 உத்தியோகத்தர்களின் பயிற்சி


கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் 2018ஆம் ஆண்டின் மூன்றாம் நிதியாண்டில் கீழ் காணப்படும் வகையில் உத்தியோகத்தர்கள் பயிற்சி நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

| இல | பயிற்சியின் பெயர் | பதவி | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கேள்வி மனுக்கோரல் மற்றும் ஒப்பந்த வேலை சம்பந்தமான செயலமர்வு. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| 2 | பிரத்தியேக கோவை முகாமை தொடர்பான செயலமர்வு . | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| 3 | அரச கணக்காய்வு தரம் மற்றும் கணக்காய்வு வினவலுக்கு எவ்வாறு பதில் தயாரிப்பது சம்பந்தமான செயலமர்வு. | நிருவாக உத்தியோகத்தர் | 01 |
| 4 | ஊழியர்களினது செயற்திறன் ஊக்குவிப்பு செயலமர்வு. | சகல ஊழியர்களும் | 24 |
| 5 | பிரதான உள்ளக கணக்காய்வாளர்கள் / உள்ளக கணக்காய்வாளர்களுக்கான பயிற்சி. | கணக்காளர் | 01 |
| | | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 |

இணைப்பு 01

| கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு<br>மொத்த ஒதுக்கீடுகளும் செலவுகளும் 2018.01.01 திகதியிலிருந்து 2018.06.30 ஆம் திகதி வரை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பொருள் | விபரம் | வருடாந்த ஒதுக்கீடு - 2018 ரூபா. | மேலதிக ஒதுக்கீடு - 2018 ரூபா. | நி .க 66 மாற்றுதல் 2018 ரூபா. | 2018 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூபா. | மொத்தச் செலவு 2018-10-01 தொடக்கம் 2018-12-31 வரை ரூபா. | செலவு 2018-01-01 இலிருந்து தொடக்கம் 2018-12-31 வரை ரூபா. |
| **23-01-01** | ***மீண்டெழும் செலவு*** | **44,322,000.00** | - | - | **44,397,000.00** | **9,457,906.89** | **37,432,201.85** |
| | **தனிப்பட்ட வேதனங்கள்** | **22,000,000.00** | | | **20,695,568.30** | **4,905,010.42** | **16,328,486.44** |
| 1001 | சம்பளங்களும் வேதனங்களும் | 15,000,000.00 | | (3,936,431.70) | 11,063,568.30 | 1,968,279.43 | 7,605,773.75 |
| 1002 | மேலதிக நேரக்கொடுப்பனவு | 1,000,000.00 | | | 1,000,000.00 | 12,563.06 | 103,581.41 |
| 1003 | வேறு கொடுப்பனவுகள் | 6,000,000.00 | | 2,632,000.00 | 8,632,000.00 | 2,924,167.93 | 8,619,131.28 |
| | **போக்குவரத்துச்செலவு** | **1,100,000.00** | | | **2,300,000.00** | **7,000.00** | **2,194,100.50** |
| 1101 | உள்நாட்டு | 100,000.00 | | | 100,000.00 | 7,000.00 | 7,000.00 |
| 1102 | வெளிநாட்டு | 1,000,000.00 | 1,000,000.00 | 200,000.00 | 2,200,000.00 | - | 2,187,100.50 |
| | **வளங்கள்** | **1,972,000.00** | | | **2,073,889.30** | **1,244,366.85** | **1,709,354.88** |
| 1201 | காகிதாதிகள் மற்றும் காரியால | 1,000,000.00 | | 101,889.30 | 1,101,889.30 | 1,044,064.30 | 1,101,889.30 |
| 1202 | எரிபொருள் | 700,000.00 | | | 700,000.00 | 141,758.16 | 432,938.46 |
| 1203 | உணவு மற்றும் சீருடை | 272,000.00 | | | 272,000.00 | 58,544.39 | 174,527.12 |
| | **பராமரிப்புச் செலவு** | **900,000.00** | | | **700,000.00** | - | **340,895.33** |
| 1301 | வாகன பராமரிப்புச் செலவு | 700,000.00 | | (200,000.00) | 500,000.00 | - | 303,680.18 |
| 1302 | இயந்திர பராமரிப்புச் செலவு | 200,000.00 | | | 200,000.00 | - | 37,215.15 |
| | **சேவை** | **16,950,000.00** | | | **18,152,542.40** | **3,233,779.86** | **16,567,168.13** |
| 1401 | போக்குவருத்துச் செலவு | 1,200,000.00 | | 328,750.00 | 1,528,750.00 | 474,193.55 | 1,527,943.55 |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் | 1,500,000.00 | | | 1,500,000.00 | 199,881.74 | 776,766.69 |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் செலவு | 720,000.00 | | | 720,000.00 | 104,150.10 | 301,242.55 |
| 1404 | வாடகை மற்றும் வரி | 10,530,000.00 | | 975,681.70 | 11,505,681.70 | 1,636,363.65 | 11,505,681.70 |
| 1409 | வேறு செலவுகள் | 3,000,000.00 | | (101,889.30) | 2,898,110.70 | 819,190.82 | 2,455,533.64 |
| | **மாற்றுதல்** | **1,400,000.00** | | | **475,000.00** | **67,749.76** | **292,196.57** |
| 1505 | சந்தா மற்றும் பங்களிப்பு | 100,000.00 | | | 100,000.00 | - | - |
| 1506 | அரச ஊழியர்களின் அசையா சொத்துக் கடன் வட்டி | 1,300,000.00 | | (925,000.00) | 375,000.00 | 67,749.76 | 292,196.57 |
| **23-01-01** | ***மூலதனச் செலவு*** | **1,885,000.00** | - | - | **2,810,000.00** | **1,979,846.81** | **2,507,372.31** |
| | ***மூலதன்ச் சொத்துக்களை மேம்படுத்தல்*** | **400,000.00** | | | **400,000.00** | **185,201.81** | **185,201.81** |
| 2001 | கட்டிடம் மற்றும் நிருமானம் | 200,000.00 | | | 200,000.00 | 150,201.81 | 150,201.81 |
| 2003 | வாகனம் | 200,000.00 | | | 200,000.00 | 35,000.00 | 35,000.00 |
| | ***மூலதனச்சொத்துக்களை கையகப்படுத்தல்*** | **1,000,000.00** | | | **1,925,000.00** | **1,670,645.00** | **1,924,420.50** |
| 2102 | தளபாடம் மற்றும் காரியாலய உபகரணங்கள் | 1,000,000.00 | | 925,000.00 | 1,925,000.00 | 1,670,645.00 | 1,924,420.50 |
| | **மனித வள அபிவிருத்தி** | **485,000.00** | | | **485,000.00** | **124,000.00** | **397,750.00** |
| 2401 | ஊழியர்களின் பயிற்சி | 485,000.00 | | | 485,000.00 | 124,000.00 | 397,750.00 |
| | **மொத்தம்** | **46,207,000.00** | - | - | **47,207,000.00** | **11,437,753.70** | **39,939,574.16** |

இணைப்பு 02




*குறிப்பு –*

*இது சிங்கள மொழியை மூல ஆவணமாகக் கொண்டு தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ஆவணமாகும் .மொழி பெயர்ப்பில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படின் சிங்கள மொழி மூலமான ஆவணம் மூல ஆவணமாகக் கருதப்படும்.*